www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
# 6th Term Examination - 2022

| | | |
|---|---|---|
| இந்து நாகரிகம் I<br>Hindu Culture I | Two hours<br>Gr -13 (2022) | 46 T I |

## பகுதி – I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. வேத காலத்தில் பிரபஞ்சப் படைப்புக் கடவுளாக விளங்கியவர்.
1) இந்திரன் 2) அக்கினி 3) உருத்திரன் 4) பிரஜாபதி 5) வருணன்

02. யோக நூலாகவும் பக்தி நூலாகவும் தத்துவ இலக்கியமாகவும் அமைந்த நூல்.
1) மகாபாரதம் 2) இராமாயணம் 3) பிரமசூத்திரம்
4) உபநிடதம் 5) வேதம்

03. குடுமியாமலைக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ள சிவதோத்திரம் யாருடைய சிவ பக்தியைப் புலப்படுத்துகின்றது.
1) இராஜசிம்மன் 2) சிம்ம விஷ்ணு 3) குமார விஷ்ணு 4) நந்திவர்மன் 5) மகேந்திரவர்மன்

04. மங்களாசனம் பெற்ற திவ்ய தேசங்களின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டவர்கள்.
1) நாயன் மார்கள் 2) ஆழ்வார்கள் 3) பல்லவ மன்னர்கள்
4) சோழர் மன்னர்கள் 5) சித்தாந்திகள்

05. வேத காலத்தில் புரோகித கடவுளாக போற்றப்பட்டவர்.
1) வருணன் 2) இந்திரன் 3) அக்கினி 4) விஷ்ணு 5) உருத்திரன்

06. வான் மீகியின் அவதாரமாக கருதப்படும் வைணவ பக்தி நெறியாளர்.
1) இராமானந்தர் 2) கபீர் தாசர் 3) மீராபாய் 4) துளசிதாசர் 5) ஸ்ரீ சைதன்யர்

07. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பூனூல் அணிவித்து அவர்களை மேன் மக்களாகப் பிரகடனப்படுத்தியவர்.
1) சுவாமி இராம கிருஷ்ணர் 2) சுவாமி விவேகானந்தர்
3) ராஜாராம் மோகன்ராய் 4) தயானந்த சரஸ்வதி
5) சுவாமி விபுலானந்தர்

08. சுவாமி விபுலானந்தருக்கு “பிரபோத சைதன்யர்” என்னும் பிரமச்சரிய நாமத்தை சூட்டியவர்.
1) சுவாமி விவேகானந்தர் 2) ஆறுமுக நாவலர்
3) சுவாமி இராம கிருஷ்ணர் 4) கா. அருணாசலதேசிகர்
5) சுவாமி சிவானந்தர்

09. வேதம் வேறு தேவாரம் வேறு என்ற சர்ச்சைக்கு முடிவு கட்டியவர்.
1) காசிவாசி செந்தி நாதையர் 2) கா. அருணாசல தேசிகர்
3) ஆறுமுக நாவலர் 4) கைலாசநாதக் குருக்கள்
5) சேர். பொன் இராமநாதன்

10. “சங்கமர்” பூசை செய்யும் திருத்தலம்
1) திருகோணேஸ்வரம் 2) திருக்கேதீஸ்வரம் 3) முன்னேஸ்வரம்
4) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் 5) நகுலேஸ்வரம்

11. “தேவராஜ“ வழிபாடு இடம் பெறும் நாடு
1) மலேசியா 2) சம்பா 3) தாய்லாந்து 4) ஜாவா 5) கம்போடியா

12. “சிற்பக்கலைக் களஞ்சியம்” என்று போற்றப்படும் ரதக் கோயில்
1) தரும ராஜ ரதம் 2) நகுல ரதம் 3) வீம ரதம்
4) அர்ச்சுன ரதம் 5) கொற்றவை ரதம்



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

13. இடத்துக்கிடம் நகர்த்தக் கூடிய விக்கிரகங்களை எவ்வாறு வகைப்படுத்துவர்.
1) சலாசல விக்கிரகம் 2) சல விக்கிரகம் 3) அசல விக்கிரகம்
4) நிலையான விக்கிரகம் 5) நின்ற விக்கிரகம்

14. "ஓசை ஒலி எலாம் ஆனாய்...." என இசையினைப் போற்றிப் பாடியவர்.
1) திருஞான சம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தர மூர்த்தி நாயனார்
4) மாணிக்க வாசகர் 5) திருமூலர்

15. வெளிப்புறச் சாதனங்களில் ஒன்று.
1) பொது விவாதம் 2) மகா நாடுகள் 3) அறிவிப்புப் பலகை
4) ஓலைச் சுவடிகள் 5) பக்தி பாடல்கள்

16. "செகராச சேகர மாலை" என்ற சோதிட நூல் யாரால் இயற்றப்பட்டது.
1) தன்வந்திரி 2) சரகர் 3) சுஸ்ருதர் 4) சோமசன்மா 5) கௌதமர்

17. குருகுலக் கல்வியை முடித்து குருதட்சணை வழங்கிய மாணவனை எவ்வாறு அழைத்தனர்.
1) சிஸ்சியன் 2) ஸ்நாகதன் 3) தம்பதி 4) நாகநாதன் 5) பிரகஸ்பதி

18. "தன்னைக் கொன்றவனைக் கொல்லும் பாதுகாப்பவனைப் பாதுகாக்கும்" என குறிப்பிடும் நூல்.
1) இதிகாசம் 2) வேதம் 3) உபநிடதம் 4) சீஷா அல்லி 5) மனுஸ் மிருதி

19. "தமிழ் மறை" என்ற சிறப்புப் பெயர் கொண்ட நூல்.
1) வேதம் 2) ஆகமம் 3) திருமந்திரம் 4) திருக்குறள் 5) ஆத்திசூடி

20. விலங்குகள் பறவைகள் போன்ற உயிரினங்களின் பொருட்டுச் செய்யப்படும் வழிபாடு.
1) பிரம யக்ஞம் 2) வேத யக்ஞம் 3) பிதிர்யக்ஞம் 4) பூத யக்ஞம் 5) மானிட யக்ஞம்

21. சைவ சித்தாந்தம் குறிப்பிடும் ஆன்ம தத்துவங்கள் எத்தனை.
1) 05 2) 07 3) 24 4) 36 5) 207

22. மெய்கண்ட சாத்திர நூல்களில் காலத்தால் முந்தியது .
1) சிவஞான போதம் 2) திருவுந்தியார் 3) திருவருட் பயன்
4) கொடிக் கவி 5) உண்மை விளக்கம்

23. ஆன்மாக்களின் கன்ம பலன்களின் அடிப்படையில் வீடு பேறு கிடைக்கும் என கூறிய வேதாந்தி.
1) சங்கரர் 2) இராமானுஜர் 3) மத்துவர் 4) ஸ்ரீ கண்டர் 5) நீலகண்டசாஸ்திரி

24. மகாபாரதத்தில் எந்த பருவத்தில் பகவத்கீதை உள்ளது.
1) சாந்தி பருவம் 2) ஆதி பருவம் 3) துரோண பருவம்
4) மோட்ச பருவம் 5) பீஷ்ம பருவம்

25. மனித உடலுக்கு அடிப்படையாக அமைந்த சக்தி.
1) பிரமம் 2) ஆன்மா 3) உலகம் 4) ஞானம் 5) இறைவன்

26. பரஞ்சோதி முனிவரிடம் தீட்சையும் உபதேசமும் பெற்றவர்.
1) மெய் கண்ட தேவர் 2) அருணந்தி சிவாசாரியார் 3) உமாபதி சிவாச்சாரியார்
4) மனவாசகங்கடந்ததேவர் 5) மறைஞான சம்பந்தர்

27. அக்குபங்சர் வைத்திய முறையில் உடலில் இனங் காணப்பட்ட இடங்களின் எண்ணிக்கை.
1) 12 2) 206 3) 16 4) 03 5) 24

28. கிரியைகளுக்கு எதிர் நிலையாகவும் கிரியைகள் மூலம் வாழ்வில் முழுமை பெற முடியாத நிலையில் ஏற்பட்ட ஆன்மீகத் தேடலாக தோற்றம் பெற்றது.
1) வேதாந்தம் 2) பிரம சூத்திரம் 3) உபநிடதங்கள் 4) பகவத் கீதை 5) சைவசித்தாந்தம்

29. நால்வகை வருணக் கட்டமைப்பின் தொடக்கத்தை இருக்கு வேதத்தின் எந்த சூக்தப் பாடல்களில் காணலாம்.
1) பிரமச்சரிய சூக்தம் 2) புருஷ சூக்தம் 3) முனி சூக்தம்
4) யம சூக்தம் 5) நாஸதீய சூக்தம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

30. "குனித்த புருவமும் கொவ்வைச் செய்வாயிற்" என்ற அப்பரின் தேவாரப் பாடல்களில் போற்றப்படும் சிவமூர்த்தம்.
    1) தட்சணா மூர்த்தி 2) இலிங்கோற்பவர் 3) திரிபுராந்தகர்
    4) கங்காதரர் 5) நடராஜ மூர்த்தம்

31. அம்மனுக்கு தனியாக ஆலயம் அமைத்த காலம்.
    1) பல்லவர் காலம் 2) சோழர் காலம் 3) தற்காலம் 4) நாயக்கர் காலம் 5) பாண்டியர்காலம்

32. பிரமிட் வடிவில் விமானம் அமைந்துள்ள ஆலயம்.
    1) முத்தீஸ்வரர் 2) பெரிய கோயில் 3) மதங்கேஸ்வரர்
    4) கங்கை கொண்ட சோழேஸ்வரம் 5) திரிபுவனம்

33. பத்து மலைக் கோயில் முருகன் ஆலயம் அமைந்துள்ள இடம்.
    1) சம்பா 2) ஜாவா 3) தாய்லாந்து 4) கம்போடியா 5) மலேசியா

34. வடமொழி இலக்கிய வரலாறு, சைவத்திருக்கோயிற் கிரியை நெறி விளக்கம், போன்ற நூல்களின் ஆசிரியர்.
    1) பேராசிரியர். எம். வேதநாதன் 2) பேராசிரியர் வை. கனகரத்தினம்
    3) கைலாச நாதக் குருக்கள் 4) பேராசிரியர் வி. சிவச்சாமி
    5) பேராசிரியர் பி. கோபால கிருஷ்ண ஐயர்

35. பண்பாடு என்னும் பதத்தை முதன் முதலில் பிரயோகித்தவர்.
    1) கன்னிங்காம் 2) T.S எலியட்டின் 3) எட்வெட் ரெய்லர்
    4) சேர் ஜோன் மார்ஷல் 5) ரி.கே சிதம்பரநாத முதலியார்

36. வேத காலத்தில் செல்வத்தை அளக்கப் பயன்படுத்தப்பட்ட பொருள்.
    1) பணம் 2) பசு 3) பெண் 4) நிலம் 5) தானியங்கள்

37. பல்லவர் காலத்தில் வேத ஆகம கல்வி மரபு பரவ காரணமாக இருந்தது.
    1) பிரம தேயம் 2) அக்கிரகாரங்கள் 3) கடிகை ஸ்தானம்
    4) சதுர்வேதி மங்கலம் 5) கிருஷ்ண மங்கலம்

38. தாய்க்கு விஷ்ணு தரிசனம் கிடைக்கச் செய்தவர்.
    1) சங்கரர் 2) இராமானுஜர் 3) மத்துவர் 4) ஸ்ரீ கண்டர் 5) நீலகண்டசாஸ்திரி

39. கற்பக்கிரகத்துக்கு மேல் அமைந்த பகுதி.
    1) விமானம் 2) கோபுரம் 3) தூலலிங்கம்
    4) பத்திர லிங்கம் 5) சூக்கும லிங்கம்

40. ஈழத்து சமய நிறுவனங்களில் காலத்தால் முந்தியது.
    1) விவேகானந்த சபை 2) அகில இலங்கை இந்து மாமன்றம்
    3) சைவ பரிபாலன சபை 4) இராம கிருஷ்ண மிஷின்
    5) சைவ வித்தியா விருத்திச் சங்கம்

➢ **41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையின் I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>குரோதம் | F<br>வம்சம் | K<br>சிருஷ்டி | P<br>தேவரடியார் |
| B<br>திதி | G<br>நடராசர் | L<br>மதம் | Q<br>முக்தி |
| C<br>நந்திக்கொடி | H<br>திரோபவம் | M<br>சர்க்கம் | R<br>சங்காரம் |
| D<br>கேது | I<br>மோகம் | N<br>வேத விருத்தி | S<br>கிழமை |
| E<br>அயனங்கள் | J<br>யோகம் | O<br>கரணம் | T<br>நகை |

41. ஆணவ மலத்தோடு தொடர்புடைய தொகுதி.
    1) A,I,L,T 2) B,G,L,R 3) C,I,O,T 4) D,F,K,R 5) E,H,O,S



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

42. பஞ்சகிருத்தியங்களோடு தொடர்புடைய தொகுதி.
1) A,H,L,T 2) C,I,M,R 3) B,H,K,R 4) E,I,N,Q 5) A,F,O,S

43. சோழர் காலத்துடன் தொடர்புடைய தொகுதி.
1) E,J,L,Q 2) C,I,K,S 3) A,F,L,S 4) D,I,M,T 5) C,G,N,P

44. புராணங்களோடு தொடர்புடைய தொகுதி.
1) A,J,N,T 2) D,F,M,Q 3) C,H,O,P 4) E,G,O,T 5) B,I,O,R

45. பஞ்சாங்கத்தோடு தொடர்புடைய தொகுதி.
1) C,F,L,T 2) D,H,N,Q 3) A,G,O,R 4) E,J,O,S 5) B,J,M,R

➢ **46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவுசெய்க.**

46. விசிட்டாத்வைதம்
1) ஈஸ்வரன், சித்து, சடம் ஆகிய மூன்றும் உண்மையானவை.
2) விசிட்டாத்வைத மரபில் “சித்து” என்பது ஆன்மாவைக் குறிக்கும்.
3) உலக இருப்பு பரிணாம வாதம் மூலம் நிறுவப்படுகிறது.
4) ஆன்மாக்களின் கன்ம பலன்களின் அடிப்படையில் வீடுபேறு கிடைக்கும்.
5) பிரமத்தை உணர்தலே முத்தியாகும்.

47. சுவாமி விபுலானந்தர்
1) “பிரபோத சைதன்யர்” என்னும் பிரமச்சரிய நாமம் கொண்டவர்.
2) யாழ் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றினார்.
3) தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டவர்.
4) “முத்தமிழ் வித்தகர்” எனப் போற்றப்படுபவர்.
5) யாழ் நூல் என்னும் இசை நூலை படைத்தவர்.

48. அனுராதபுரக் காலம்
1) கி.மு 3ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 9ம் நூற்றாண்டு வரை
2) கதிர்காம முருகன் ஆலயத்தை துட்டகைமுனு வழிபட்டமை.
3) திருக்கேதீஸ்வரம் சம்பந்தரினால் புகழ்ந்து பாடப்பட்டது.
4) ஜனநாத மங்களம் எனவும் சிறப்பிக்கப்பட்டது.
5) பௌத்த சமயம் அரச ஆதுரவுடன் வளர்ச்சி பெற தொடங்கியது.

49. மகா புராணங்கள்
1) மகா புராணங்கள் 18 ஆகும்.
2) தச இலட்சணங்கள் பற்றி கூறுகின்றது.
3) அறநெறிப் போதனை புரிவது.
4) நண்பர் போல் அறிவுரை வழங்குவது.
5) மௌரிய காலத்தில் தோற்றம் பெற்றது.

50. உபநிடதங்கள்
1) பிரஸ்தான திரயங்களில் ஒன்று.
2) கிரியைகளுக்கு எதிர் நிலையாக எழுந்தவை.
3) வாழ்வில் முழுமை பெற்ற நிலையில் ஏற்பட்ட ஆன்மீக தேடல்
4) பிரமத்தை உணர்தலே முத்தி என கூறுகின்றது.
5) வேதத்தின் ஞான காண்டப் பகுதியில் தோற்றம் பெற்றது.

(50x2=100 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் ஆறாம் தவணைப் பரீட்சை - 2022

# Conducted by Field Work Centre, Thondaimanaru 6th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து நாகரிகம் II<br>Hindu Culture II | Three Hours 10 min<br>Gr -13 (2022) | 46 | T | II |

## பகுதி – II

❖ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் விடயங்களில் விளக்குக.

அ) ஆகமம் என்ற சொல்லின் பொருள் விளக்கம்

ஆ) ஆலய நிருமாணமும் திருவுருவ அமைப்பும்

இ) ஆகமங்களின் பிறப்பு

ஈ) சைவ சித்தாந்த மரபுகள்

(5+5+5+5 = 20 புள்ளிகள்)

agaram.lk

02. தென்னக வரலாற்றில் பல்லவர் காலம் கொண்டுள்ள சிறப்புக்களை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

அ) கால சூழ்நிலை

ஆ) மன்னர்களின் பங்களிப்பு

இ) நாயன்மார்களின் பணிகள்

ஈ) திருக்கோயில்களின் வளர்ச்சி

(5+5+5+5 = 20 புள்ளிகள்)

03. வேதாந்தங்களின் வரிசையில் அத்வைதம் துவைதம் பெறும் சிறப்புக்களை மேல்வரும் விடயங்களில் பரிசீலனை செய்க.

அ) சங்கரர் கூறும் பிரபஞ்சம்

ஆ) சங்கரர் கூறும் ஆன்மா

இ) மத்துவர் கூறும் பிரமம்

ஈ) மத்துவர் கூறும் முத்தி

(5+5+5+5=20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி II

*04.* நவீன சீர்திருத்த இயக்கங்களில் ஆரிய சமாஜத்தின் பணிகளை எடுத்து விளக்குக.

(20 புள்ளிகள்)

*05.* இலங்கையில் பொலன்னறுவைக் காலத்தில் ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சியின் பிரதான அம்சங்களை பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

*06.* இந்துப் பண்பாட்டில் இசைக்கலை பெற்றுள்ள முக்கியத்துவத்தினை விளக்கி ஆராய்க.

(20 புள்ளிகள்)

*07.* சைவ சித்தாந்தம் விளக்கும் பதியின் உண்மைத் தன்மையினையும் இலக்கண இயல்புகளையும் விளக்கிக் கூறுக.

(20 புள்ளிகள்)

*08.* மனித வாழ்வை மேம்படுத்தும் புருடாத்தங்களின் சிறப்பினை விளக்கி ஆராய்க.

(20 புள்ளிகள்)

agaram.lk



agaram.lk